**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்திய வானிலைத் துறை**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(28.02.2024 முதல் 03.03.2024)**

**அறிக்கை எண் 017/2024** **தேதி.27.02.2024**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 18°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 23.02.24 முதல் 26.02.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 34°செ முதல் 37°C ஆகவும் இரவுநேரவெப்பநிலை 22°C முதல் 24°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 83 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 41 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-16 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (23.02.2024 முதல் 26.02.2024) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 03.03.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23/02 | 24/02 | 25/02 | 26/02 | தேதி | நாள்-1 28/02 | நாள்-2 29/02 | நாள்-3 01/03 | நாள்-4 02/03 | நாள்-5 03/03 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 36 | 37 | 36 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 34 | 35 | 35 | 36 |
| 23 | 23 | 24 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 24 | 24 | 25 | 25 |
| 4 | 6 | 3 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 2 | 3 | 2 | 4 | 1 |
| 80 | 83 | 80 | 78 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 70 | 80 | 70 | 70 |
| 41 | 47 | 52 | 52 | குறைந்தபட்சகாற்றின் ஈரப்பதம் (%) | 20 | 20 | 20 | 20 | 20 |
| 9 | 8 | 9 | 16 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 8 | 8 | 8 | 6 |
| 200 | 250 | 90 | 90 | காற்று வீசும் திசை | 90 | 70 | 70 | 70 | 70 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (28.02.2024 முதல் 03.03.2024)**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 34°செ முதல் 36°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 23°செ முதல் 25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 6-10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன்பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| **28-02-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **29-02-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **01-03-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **02-03-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **03-03-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் 6 - 12 கி.மீ வேகமான காற்றுடன் பொதுவாக தெளிவான வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது.<br>பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை உயர்ந்து வருகிறது. அதே சமயம் காற்றின் ஈரப்பதம் குறைந்து வருகிறது. மண் ஈரத்தினை பொறுத்துஇறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்து பயிர் கழிவு மூடாக்கு இடவும். |
| நெல் | பூக்கும் பருவம் | பகல்நேர மற்றும் இரவுநேர வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால், நடவு செய்யப்பட்ட நவரைப் பருவ நெல் பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சி வர வாய்ப்புள்ளது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு பாஸ்போமிடான் 40 எஸ் எல் என்னும் மருந்தினை 600 மிலி அளவு 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| கரும்பு | வளர்பருவம் | வெப்பநிலை அதிகரித்து ஈரப்பதம் குறைய வாய்ப்புள்ளதால் கரும்பில் இளங்குருத்துப்புழு வர வாய்ப்புள்ளது. இதற்கு அடிக்கடி நீர் பாய்ச்சி வயலை ஈரமாக வைத்துக் கொள்ளவும் |
| காய்கறிகள் | வளர்பருவம் | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் குறிப்பாக தக்காளியில் காணப்படுகிறது. இதற்கு முன்பாதுகாப்பு நடவடிக்கையாக 5 சத வேப்பங்கொட்டை வடிகரைசலை தெளிப்பதன் மூலம் இலைசுருளும் நச்சுயிரி நோய் வருவதையும் தவிர்க்கலாம். |
| வாழை | | காற்றின் வேகம் மணிக்கு 8 – 10 கி.மீ வரை காணப்படுவதால் 5 மாதங்களுகங்கு மேலான வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.<br>வாழையில் பேக்டீரியா குருத்து அழுகல் நோய் காணப்படுகிறது. இதை கட்டுப்பபடுத்த பிளீச்சிங் பவுடரை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 20 கிராம் வீதம் கலந்து கன்றின் அருகில் ஊற்றவும். |

| | | |
|---|---|---|
| மா | பூக்கும் பருவம் | நிலவும் வறண்ட வானிலையில், மண்ணில் ஈரப்பதம் இருக்கும் பொழுது பூ வராத மா மரங்களுக்கு பூக்களின் உற்பத்தியை தூண்டுவதற்கு 0.5 சதவீதம் யூரியா (5 கிராம்/லிட்டர்) அல்லது 1 சதவீதம் (10 கிராம்/லிட்டர்) பொட்டாசியம் நைட்ரேட் கரைசலைத் தெளிக்கவும்.<br>மண்ணில் ஈரப்பதம் இருக்கும் பொழுது மா மரங்களில் பூக்கள் உதிராமல் இருக்கவும் மற்றும் அதிக காய்கள் பிடிக்கவும், 2 சத பொட்டாசியம் நைட்ரேட் கரைசலை தெளிக்கவும். |
| மஞ்சள் | அறுவடை | நிலவும் வறண்ட வானிலையை கருத்தில் கொண்டு அறுவடை செய்த மஞ்சள் கிழங்கினை பதப்படுத்தி சந்தைப்படுத்தவும். |
| கால்நடைகள் | | பகல் நேர வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால் கால்நடை மற்றும் கோழிகளுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் அளிக்கவும். கால்நடைக்குடில்களைச்சுற்றிலும் ஈரமான சாக்குகளை தொங்கவிடவும். கால்நடைகளை வெயில் நேரத்தில் மேய்ச்சலுக்கு விடவேண்டாம். |

## குறுஞ்செய்தி

- பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை உயர்ந்து, அதே சமயம் காற்றின் ஈரப்பதம் குறைந்து வருவதால் கால்நடை மற்றும் கோழிகளுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் அளிக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**